## விவசாயிகள் நலன் காக்க 50 நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள்!

# 15,79,393 புதிய குடும்ப அட்டைகள் ; 2009 புதிய நியாய விலைக் கடைகள்!

## சட்டப்பேரவையில் - உணவுத்துறை சாதனைகளைப் பட்டியலிட்டு பதிலுரையில் அமைச்சர் அர.சக்கரபாணி அறிவிப்பு!

சென்னை,ஜூன்.30-

**சட்டப் பேரவையில், உணவுத்துறை மானியக் கோரிக்கை மீதான விவா தத்திற்குப் பதிலளித்து உரையாற்றிய அமைச்சர் அர.சக்கரபாணி, "விவசாயிகளின் நலன் காக்க - 50 நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள் ஏற்படுத்தப்படும் என்பது உள்ளிட்ட ஏராளமான அறிவிப்புகளை வெளியிட்டார்.**

**சட்டப் பேரவையில் அமைச்சர் அர. சக்கரபாணி வழங்கிய பதிலுரை வருமாறு:**

தமிழ்நாட்டை தலைநிமிரச் செய்த தந்தை பெரியார் அவர்களையும், மதராஸ் மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' என்று பெயர்சூட்டி மகிழ்ந்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், தமிழ்நாட்டின் சமூகப் பொருளாதாரத்தின் தந்தை, செந்தமிழர் வாழ்வு நலம் செழிக்க வந்த வான்மழையாய் வங்கக் கடலோரம் மோனத்தவமிருந்து எட்டுத்திக்கும் புகழ் மணக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களையும் நன்றியுடன் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக ஆக்கிட அயராது உழைத்துவரும் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நான்காம் முறையாக உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கையை இந்த மாமன்றத்தில் சமர்ப்பித்திடும் வாய்ப்பினை நல்கிய முதலமைச்சர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்பே 'நாடும் நமதே! நாற்பதும் நமதே!' என்று சூளுரைத்து, பாராளுமன்றத் தேர்தலில் இந்தியாவே உற்றுநோக்குகின்றவிதத்தில் வெற்றிக்கொடி நாட்டி, தலைமையேற்ற நாள் முதல் அனைத்துத் தேர்தல்களிலும் வெற்றிமுரசு கொட்டிய தமிழ் நாயகர் நம் அன்பு முதல்வர் அவர்களுக்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பேரவைத் தலைவர் அவர்களுக்கும், நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும், வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இளைஞர்களின் இனிமை, அன்பு உடன்பிறப்பு, அமைச்சராகப் பொறுப் பேற்றவுடன் எங்கள் திண்டுக்கல் மாவட்டத்திற்கு, 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 23 ஆம் நாள் என்னுடைய தொகுதியிலுள்ள இடையகோட்டைக்கு வருகை தந்து, தமிழகத்தை பசுமை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற முதலமைச்சர் அவர்களுடைய எண்ணத்தை செயல்படுத்தக்கூடிய வகையில், உலக சாதனையாய் சுமார் 120 ஏக்கர் நிலத்தில் 6 இலட்சத்து 40 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியைத் தொடங்கி வைத்து, அதிலே தானும் ஒரு மரக்கன்றை நட்டு வைத்ததையடுத்து, அந்தப் பகுதியில் இந்த கோடைகாலத்தில் மட்டும்—20 மலைகளில்—தொடர்ந்து சுமார் 8 கிலோ மீட்டர் ரேடியஸில் மழை பெய்திருக்கிறது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோன்று, தமிழ்நாட்டை சிறப்புத் திட்டங்கள் செயலாக்கம் மூலம் தன்னிகரில்லா மாநிலமாக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் அருமை இளவல், நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின்போது 8,418 கிலோ மீட்டர் தூரம் பயணித்து, 22 நாட்களில் 122 கூட்டங்களில் 3,726 நிமிடங்கள் பேசி, அத்தேர்தலில் 40/40 வெற்றி பெற (மேசையைத் தட்டும் ஒலி) உறுதுணையாக இருந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) வருங்கால தமிழ்நாட்டை வழி நடத்தவுள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு என் அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அமைச்சர் பெருமக்களுக்கும், சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் அனைவருக்கும், அனைத்து மாமன்ற உறுப்பினர்களுக்கும், என்னை வளர்த்து ஆளாக்கிய என் தாய் தந்தைக்கும் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1996 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து ஆறுமுறை சட்டமன்ற உறுப்பினராக இம்மாமன்றத்திற்கு வரக் காரணமாக இருக்கின்ற, என்னை ஆளாக்கியிருக்கின்ற, உருவாக்கியிருக்கின்ற, எனது தொகுதி மக்களுக்கு என்னுடைய மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோன்று, நான் வெற்றி பெறுவதற்கு பெரிதும் உறுதுணையாக இருந்த திராவிட முன்னேற்றக் கழக முன்னோடிகள், தோழமைக் கட்சிகளின் நண்பர்கள் ஆகியோருக்கு வணக்கம். ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், திண்டுக்கல் மாவட்ட மக்கள் அனைவருக்கும் என் சார்பாக இந்த நேரத்தில் நான் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**முதலமைச்சர் அவர்கள், இந்த ஆண்டும் உணவுத் துறைக்கு சுமார் 10,500 கோடி ரூபாயை மானியமாக வழங்கியிருக்கிறார்கள். அவர்களுக்கும், நிதிய மைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.**

முதலமைச்சர் அவர்கள் பொறுப் பேற்ற இந்த மூன்றாண்டு காலத்தில் நெல்லுக்கான மாநில அரசின் ஊக்கத் தொகை மூன்று முறை உயர்த்தப்பட்டிருக்கிறது. கடந்த 10 ஆண்டுகால ஆட்சியில் ஒருமுறைகூட நெல்லுக்கான ஊக்கத்தொகை உயர்த்தி வழங்கப்படவில்லை. ஆனால், முதலமைச்சர் அவர்கள் 2021 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் தேதி பொறுப்பேற்ற பிறகு, சன்ன ரகத்திற்கு 70 ரூபாய் என்றிருந்ததை 100 ரூபாயாகவும், பொது ரகத்திற்கு 50 ரூபாய் என்றிருந்ததை 75 ரூபாயாகவும் உயர்த்தி, 1-10-2021 முதல் அந்த ஊக்கத்தொகையை வழங்கினார்கள். கடந்த 2023 ஆம் ஆண்டு, அந்த சன்ன ரகத்திற்கான ஊக்கத்தொகையை 100 ரூபாயிலிருந்து 107 ரூபாயாகவும், பொது ரகத்திற்கு 75 ரூபாயிலிருந்து 82 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கினார்கள். நேற்றைக்கு முதலமைச்சர் அவர்களுடைய தலைமையில் நடைபெற்ற, வேளாண்மை-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களும், நானும், தலைமைச் செயலாளர் அவர்களும், எங்கள் துறையினுடைய அதிகாரிகளெல்லாம் கலந்து கொண்ட கூட்டத்தில், அவர்கள் நெல்லுக்கான ஊக்கத்தொகையை அறிவித்தார்கள். அதாவது, இந்த ஆண்டு, வருகின்ற செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதி முதல் அந்த ஊக்கத்தொகையினை சன்ன ரகத்திற்கு 107 ரூபாய் என்றிருப்பதை 130 ரூபாயாகவும், பொது ரகத்திற்கு 82 ரூபாய் என்றிருப்பதை 105 ரூபாயாகவும் உயர்த்தி வழங்க ஆணையிட்டிருக்கிறார்கள். வருகின்ற செப்டம்பர் மாதம் முதல் சன்ன ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,450/- வழங்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.2,500/- வழங்குவோம் என்று சொன்னோம்.

அந்த வாக்குறுதியும் நேற்றைக்கு முதலமைச்சர் அவர்கள் உறுதிபடுத்தியிருக்கிறார். அடுத்த ஆண்டு குவிண்டால் ஒன்றிற்கு ரூ.2,500 வழங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இந்த ஆட்சிக்கு இன்னும் 22 மாதங்கள் இருக்கின்றன. கண்டிப்பாக இந்த ரூ.2,500-க்கு மேலேயும் செல்லும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன், இந்த 3 ஆண்டு காலத்தில் நெல்லுக்கான ஊக்கத் தொகை சுமார் 1,200 கோடி ரூபாயை தமிழக அரசு வழங்கியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலை வாய்ப்பு. பருவ காலப் பணியாளர்கள் 591 பேர் இன்றைக்கு நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். பணியின்போது இறந்த ஊழியர்களின் வாரிசுகள் 233 பேர்களுக்கு கருணை அடிப்படையில் பணியாணை வழங்கப்பட்டுள்ளது. 3,467 பேர் பருவகால பட்டியல் எழுத்தர், உதவுபவர், காவலர் பணிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். ஆக மொத்தம் 4,291 பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு 40 கிலோ எடைகொண்ட மூட்டை ஒன்றிற்கு கூலியாக கடந்த காலத்தில் 3 ரூபாய் 25 காசு தான் இருந்தது. முதலமைச்சர் அவர்கள் தஞ்சையில் நடைபெற்ற விழாவில் மூட்டை ஒன்றிற்கான கூலியை ரூ.10 ஆக உயர்த்திக் கொடுத்தார். பருவகால பட்டியல் எழுத்தர், உதவுபவர்களுக்கு முதன்முறையாக தினப்படியாக ரூ.120-ம், பருவகால காவலர்களுக்கு தினந்தோறும் ரூ.100 தினப்படி வழங்கப்படுகிறது. ஆண்டொன்றுக்கு 83 கோடி ரூபாய் கூடுதல் செலவானால் பரவாயில்லை, அதனை இந்த அரசு வழங்குமென்று அந்தத் தொழிலாளர்களுக்கு உதவி செய்தவர் முதலமைச்சர் அவர்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாமன்ற உறுப்பினர்களெல்லாம், குடும்ப அட்டை வேண்டும்; விண்ணப்பித்து பல மாதங்களாகியும் தங்களுக்கு குடும்ப அட்டை கிடைக்கவில்லை யென்று சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தல் வாக்குறுதியாக, நாங்கள் ஆட்சிக்கு வந்தால், குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்தால், 15 நாட்களில் குடும்ப அட்டை வழங்கப்படும் என்று சொன்னோம். அதன்படி முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு ஆட்சி பொறுப்பேற்றது முதல் தற்போது வரை 15 இலட்சத்து 79 ஆயிரத்து 393 குடும்ப அட்டைகள் வழங்கப் பட்டுள்ளன. தற்சமயம் பெறப்பட்ட 2 இலட்சத்து 92 ஆயிரத்து 43 விண்ணப்பங்களில் 9 ஆயிரத்து 784 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டு, ஆதார் எண்ணுடன் சரிபார்க்கப்பட்டு குடும்ப அட்டைகள் அச்சிடும் நிலையில் உள்ளன. மீதமுள்ளவற்றை அரசு பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது. தேர்தல் வந்ததால் 3 மாதங்கள் ஆகிவிட்டது. தேர்தல் நடத்தை விதிகளைகூட விலக்கிக் கொள்ள வேண்டுமென்று எங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த மாநிலங்களவை உறுப்பினர் மரியாதைக்குரிய வில்சன் அவர்கள் தேர்தல் ஆணையரிடம் கேட்டுப் பார்த்தார். விலக்கு அளிக்கப்படவில்லை. அதனால் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு காலதாமதம் ஆகிவிட்டது. எனவே, தகுதியுள்ள அனைத்து நபர்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

> **"உழவர் உதவி மையம். அறுவடை செய்த நெல்லை நேரடி கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்வது மற்றும் இது தொடர்பான தகவலைப் பெறுவதில் உழவர் பெருமக்களுக்கு இருக்கும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக 'உழவர் உதவி மையம்' என்னும் தொலைபேசிச் சேவை இன்றைக்கு வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத் தலைமை அலுவலகத்தில் இயங்கும் உழவர் உதவி மையத்தின் கட்டணமில்லா தொலைபேசி எண் 1800 599 3540 (6-இணைப்புகள்) மூலம் விவசாயிகள் நெல் விற்பனை தொடர்பான ஆலோசனை, விளக்கம் கேட்பதுடன் புகார்களும் அளிக்க முடியும். இந்தச் சேவை தொடங்கப்பட்ட காலத்திலிருந்து 21-10-2021 முதல் தற்போது வரை 12 ஆயிரத்து 925 அழைப்புகள் பெறப்பட்டு, தொடர்புடைய மண்டல அலுவலர்கள் மூலம், உழவர்கள் விரும்பிய சேவைகள் வழங்கப்பட்டுள்ளன."**



உறுப்பினர் செ. ராஜேஷ் குமார் அடிக்கடி ஒன்றை சொல்வார். முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளை முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்ற வேண்டும் என்று கோருவார். முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகளிலிருந்து 15 இலட்சத்து 5 ஆயிரத்து 45 குடும்ப அட்டைகள் முன்னுரிமையுள்ள குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. இதனால் இன்றைக்கு 48 இலட்சத்து 91 ஆயிரத்து 394 பேர்கள் பயன்பெற்றுள்ளனர். அதே மாதிரி உறுப்பினர் ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறார். தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ள முன்னுரிமையுள்ள குடும்ப அட்டை பயனாளிகளின் எண்ணிக்கை 3,64,65,360 ஆகும். முன்னுரிமை குடும்ப அட்டைகளிலிருந்து இறப்பு, புலம் பெயர்வு, குடும்ப அட்டைதாரரின் தற்போதைய பொருளாதார நிலை உயர்வு ஆகியவற்றினால் ஏற்படும் எண்ணிக்கையின் அடிப்படையில் முன்னுரிமை குடும்ப அட்டைகளாக PHS வகை மாற்றம் செய்யப்பட்டு வருகின்றன. அதனடிப்படையில் மே 2021 முதல் மே 2024 வரை தகுதியுள்ள 15 இலட்சத்து 5 ஆயிரத்து 45 முன்னுரிமையற்ற குடும்ப அட்டைகள் முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது. Antyodaya Anna Yojana குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டு, 48 இலட்சத்து 96 ஆயிரத்து 394 பயனாளிகள் பயன்பெறும் வகையில் பொது விநியோகத் திட்ட தரவு தொகுப்பில் வகை மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

உறுப்பினர் காலையில் இதுகுறித்து தெரிவித்தார். Collector office-லும் District Supply Officer-விடம் அதிகாரத்தை கொடுத்துவிட்டால், Commissioner office-க்கு வரவேண்டிய அவசியமில்லை என்று ஒரு கோரிக்கை வைத்தார். எப்பொழுதும் ஆர்வமாக இதனை கேட்டுக் கொண்டேயிருப்பார். அவருடைய கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 21,099 குடும்ப அட்டைகள் முன்னுரிமை குடும்ப அட்டைகளாக மாற்றப்பட்டுள்ளன. தற்போது 582 மனுக்கள் மட்டும் பரிசீலனையில் உள்ளது. மாநில அளவில் தரவு தொகுப்பு பராமரிக்கப்பட்டு வருவதால், மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமோ அல்லது மாவட்ட வழங்கல் அலுவலர் மூலமோ அட்டை மாற்றும் அதிகாரம் வழங்குவதால் ஏற்படும் சாதக பாதகங்களை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

அதே மாதிரி ரேஷன் அட்டை தொலைந்துவிட்டால், நகல் அட்டை பெறுவதில் பெரிய சிரமம் இருக்கிறது. தாலுகா office செல்ல வேண்டும். அதே மாதிரி வட்ட வழங்கல் அலுவலரை சந்தித்து மனு கொடுக்க வேண்டும். 2 முறை, 3 முறை அந்த அட்டை பெறுவதற்காக செல்ல வேண்டும். இதன் காரணமாக செலவு அதிகமாகும்.

அதைத் தவிர்க்கும் வண்ணமாக, முதலமைச்சர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்ற பின்பு, இணைய வழியிலே online மூலமாக ஐம்பது ரூபாய் செலுத்தினால், நகல் அட்டை தபால் துறையின் மூலமாக வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, அதை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்; மரியாதைக்குரிய அன்பு சகோதரர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

இதுவரை 4 இலட்சத்து 54 ஆயிரத்து 635 நகல் குடும்ப அட்டைகள் அஞ்சல் வழியில் வழங்கப் பட்டுள்ளன என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு புதுப்பொலிவோடு நியாய விலைக்கடைகள் இருக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் எங்கள் அழைத்து, அறிவுரை வழங்கினார்கள். தமிழ்நாட்டில் நியாயவிலைக் கடைகளின் தோற்றத்தில் அழகாகவும், உள்கட்டமைப்பில் வசதியாகவும் விளங்க வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். அதன்படி 6,839 கடைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. 9,356 கடைகள் ISO:9001 தரச் சான்றிதழும், 2059 கடைகள் ISO:28000 தரச் சான்றிதழும் பெற்றுள்ளன. சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்குப் பரிசு மற்றும் சான்றிதழ் இந்த கழக அரசு பொறுப்பேற்றதிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. பொது விநியோகத் திட்டத்தின் முதுகெலும்பாய் இருக்கும் நியாயவிலைக் கடைகளின் விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களின் பணியை ஊக்குவிக்கும் வண்ணம் மாநில மற்றும் மாவட்ட அளவில் சிறந்த விற்பனையாளர்கள் மற்றும் எடையாளர்களுக்கு ஆண்டுதோறும் மொத்த ரொக்கப் பரிசாக 6 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாயும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டு வருகின்றன. Ration கடைகளை பிரிக்க வேண்டுமென்று நிறைய உறுப்பினர்கள் கோரிக்கை வைத்தார்கள். உறுப்பினர் சீனிவாசன் அவர்களும், உறுப்பினர் அசோகன் அவர்களும், பேரவைத் தலைவர் அவர்களும் நேற்றைக்கு கோரிக்கை வைத்தார்கள். 1,000 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள நகர பகுதிகளிலும், 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் உள்ள ஊரகப் பகுதிகளிலும் உள்ள நியாயவிலைக் கடைகளைப் படிப்படியாகப் பிரித்துப் புதிய கடைகளைத் திறந்து வருகிறோம். மே-2021 முதல் 31-5-2024 வரை 699 முழுநேர நியாயவிலைக் கடைகளும், 1,310 பகுதி நேர நியாயவிலைக் கடைகளும் என மொத்தம் 2,009 நியாயவிலைக் கடைகள் புதிதாகத் திறக்கப்பட்டுள்ளன. உறுப்பினர்கள், நான் ஏற்கெனவே சொன்ன மாதிரி, நியாய விலைக் கடை பிரிக்க வேண்டுமென்று, அந்தந்த மாவட்டத்தின் மாவட்ட ஆட்சித் தலைவர், கூட்டுறவு சங்கத்தின் இணைப் பதிவாளர் மற்றும் மாவட்ட வழங்கல் அலுவலகத்திலே மனுக்கள் கொடுங்கள். அதில் காலதாமதம் ஏற்பட்டால், என்னிடமோ, எனது செயலாளரிடமோ அல்லது ஆணையரிடத்திலே மனுக்கள் கொடுங்கள். அந்த நியாய விலைக் கடைகளையெல்லாம் பிரித்து தருவதற்கு முதலமைச்சர் அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். நியாய விலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடம் வேண்டுமென்று தெரிவித்தீர்கள். சிவகாசி சட்டமன்றத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் அசோகன் அவர்கள், நாங்கள் மூன்று கடைகள் நகரத்தில் கட்டியுள்ளோம். அவை மூன்று வருடங்களாக திறக்கப் படாமல் உள்ளது என்று சொன்னார்கள்.

## நியாய விலைக் கடைகளுக்குச் சொந்தக் கட்டிடம்!

இது சம்பந்தமாக நகராட்சி துறை அதிகாரிகளிடமும், எங்கள் துறையின் அதிகாரிகளிடமும் கலந்து பேசி, தமிழ்நாட்டில் எந்தெந்த கடைகளெல்லாம் கட்டி திறக்கப் படாமல் உள்ளதோ, அதையெல்லாம் திறப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். 31-5-2024 அன்றைய நிலவரப்படி 36 ஆயிரத்து 954 நியாய விலைக் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 19 ஆயிரத்து 872 நியாயவிலைக் கடைகள் சொந்தக் கட்டடத்திலும், 9 ஆயிரத்து 285 நியாயவிலைக் கடைகள் வாடகையில்லா கட்டடத்திலும், 7 ஆயிரத்து 797 நியாயவிலைக் கடைகள் வாடகைக் கட்டடத்திலும் செயல்பட்டு வருகின்றன.

இந்நிலையில் வாடகைக் கட்டடத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகளுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் இதர திட்ட நிதிகளின்மூலம் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2021 முதல் மே-2024 வரை நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 3,191 கடைகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டப்பட்டுள்ளது என்பதை இந்த நேரத்திலே அவைக்கு நான் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், 500 full time நியாய விலைக் கடைகள் கட்ட வேண்டுமென்றுதான் கொடுத்துள்ளார்கள். பகுதி நேர கடைகளுக்கு MLA fund-ல், M.P. fund-ல், மற்ற Union-ல் General fund-ல் (குறுக்கீடு) அது செய்ய முடியாது. (சிரிப்பு) மாநகராட்சியில் ஊரக வளர்ச்சி செய்ய முடியாது. நீங்கள் MLA fund-ல் கொடுக்க வேண்டும். இல்லாவிட்டால் CSR fund வாங்கி கட்டலாம். மதுரை மாவட்டத்தில் பெரிய Minister இருக்கிறார். வணிக வரி மற்றும் பத்திரப் பதிவுத் அமைச்சர் மூர்த்தி அவர்கள் இருக்கிறார்கள். அவர்களிடம் தெரிவித்து, பெரிய தொழிலதிபர்களிடம் CSR fund பெற்று நிறைய கட்டங்கள் மதுரை மாநகர் முழுவதும் கட்டுங்கள்.

அங்கீகரிக்கும் பிரதிநிதி வாயிலாக இன்றியமையாப் பொருட்கள் பெறும் வசதி. மாற்றுத் திறனாளிகள், வயது முதிர்ந்தோர்கள், மருத்துவமனைகளிலே சிகிச்சைப் பெறுவோர்களெல்லாம் Ration கடைகளுக்கு நேரடியாகச் சென்று பொருட்களைப் பெற முடியவில்லை. வீட்டிற்கே பொருள் கொடுக்க வேண்டுமென்று உறுப்பினர் சீனிவாசன் அவர்களும், உறுப்பினர் அசோகன் அவர்களும் சொன்னார்கள். அதற்கு நான் பதில் சொன்னேன். இருந்தாலும், நியாய விலைக் கடைகளுக்கு நேரடியாகச் சென்று பொருட்களைப் பெற இயலாத மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் உடல் நலம் குன்றியவர்கள் ஆகியோர் தங்களுக்கான இன்றியமையாப் பொருட்களைப் பெறுவதற்காக, யாராவது ஒரு பிரதிநிதியை அவர்கள் நியமனம் செய்து பெற்றுக் கொள்ளும் வசதி நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

31-5-2024 வரை 3 இலட்சத்து 15 ஆயிரத்து 437 குடும்ப அட்டைதாரர்களுக்கு அங்கீகாரச் சான்றுகள் வழங்கப் பட்டு, 2 இலட்சத்து 76 ஆயிரத்து 733 குடும்ப அட்டைதாரர்கள் தொடர்ந்து தங்களால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் வாயிலாக இன்றியமையா பொருட்களை நியாய விலைக் கடைகளில் பெற்று, பயனடைந்து வருகின்றார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

### பயோ மெட்ரிக் முறை!

அதேபோன்று, ரேஷன் கடைகளுக்குச் செல்கிறோம். தற்போது, ரேஷன் கடைகளில் பயோமெட்ரிக் முறையை கண்டிப்பாக பின்பற்ற வேண்டுமென்றும், கைரேகையை பதித்தால்தான் பொருட்கள் கிடைக்கும் என்றும் ஒன்றிய அரசு சொல்லிவிட்டது. ஆனால், சில நேரங்களில், வயல்வெளியில் வேலைக்குச் செல்பவர்கள், ரேகை அழிந்தவர்களெல்லாம் ரேஷன் கடைக்குச் சென்று கைரேகையை பதித்தால், பயோமெட்ரிக் இயந்திரம் வேலை செய்வதில்லை. சென்ற ஆண்டே முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, இனிமேல் பயோமெட்ரிக் முறையையும், கண் கருவிழி (Iris) சரிபார்க்கும் முறையையும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று சொன்னோம்.

கைவிரல் ரேகைப் பதிவு முறைமூலம் பொருட்கள் வழங்கும் நடைமுறை தற்போது உள்ளது. அதில், சில இடங்களில் கைவிரல் ரேகைப் பதிவு சரியாக விழாததால் பொருட்கள் பெறுவதில் தாமதமும், சிரமமும் ஏற்படுவதாக உறுப்பினர்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசி, கண் கருவிழி சரிபார்ப்பு முறை அறிமுகப்படுத்தப் படும் என்று நான் ஏற்கெனவே இந்த அவையிலே கூறியிருந்தேன்.

கண் கருவிழி சரிபார்ப்பு முறை மூலமாக பொதுமக்கள் பொது விநியோகத் திட்டப் பொருட்களைப் பெறும் திட்டத்தை, சென்னை, சேப்பாக்கத்தில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தற்போது, தமிழ்நாட்டிலே 9 ஆயிரத்து 182 கடைகளில் இந்தமுறை செயல்படுத்தப்பட்டு வருகிறது. விரைவில் அனைத்துக் கடைகளிலும் கண் கருவிழி சரிபார்ப்புமுறை செயல்படுத்தப்படும்.

கண் கருவிழி சரிபார்ப்புமுறை குறித்து பேரவைத் தலைவர் அவர்களுக்கு ஏதாவது சந்தேகம் இருந்தால், எங்களுடைய துறை சார்ந்த அதிகாரிகளை உங்களுடைய அறைக்கு அனுப்பி வைக்கிறேன்.

மீதமுள்ள நியாய விலைக் கடைகளிலும் மிக விரைவிலே, இன்னும் 2, 3 மாதங்களுக்குள்ளாக கண் கருவிழி சரிபார்ப்பு முறை செயல்படுத்தப்படும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கான ஏற்பாடுகள் கண்டிப்பாக செய்யப்படும் என்பதை இந்தநேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவயர்களுடைய அரசு பொறுப்பேற்றவுடனே, ஒருநாள் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டு இருந்தபோது, நிறைய நெல்மணிகள் மழையில் நனைந்துவிட்டன என்பதை அறிந்து,

முதலமைச்சர் அவர்கள், வேளாண்-உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களையும், என்னையும் தொலைபேசியில் அழைத்து, இப்போது நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்று கேட்டார்கள்? நாங்கள் சென்னையில்தான் இருக்கிறோம் என்று சொன்னோம். உடனடியாக நீங்கள் வீட்டிற்குப் புறப்பட்டு வாருங்கள் என்று சொன்னார்கள். இரண்டுபேரும் வீட்டிற்குச் சென்றோம். தமிழ்நாட்டில் மழை பெய்கிறது; நெல் மூட்டைகளை எந்தெந்த பகுதிகளில் திறந்தவெளியில் அடுக்கியிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். 103 இடங்களில்—கிராமங்களில் தட்டுப்போர் போட்டிருப்போம். தார்ப்பாய் போட்டு மூடியிருப்போம். அதேபோன்று வைக்கப்பட்டிருப்பதையெல்லாம் அரசுக்கு சொந்தமான இடங்களிலே வைப்பதற்கு, அதாவது, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை மற்றும் மற்ற அரசுத் துறைகளுக்குச் சொந்தமான இடங்கள் எங்கெங்கு இருக்கின்றனவோ, அவற்றையெல்லாம் நீங்கள் பயன்படுத்த வேண்டுமென்று சொன்னார்கள்.

### நவீன நெல் சேமிப்புத் தளங்கள்!

அதற்காக முதலமைச்சர் அவர்கள் ஆணையின்படி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் ஏற்கெனவே இருந்த கிடங்கு வசதிகளுடன் இந்தியாவுக்கே முன்னோடியாக தமிழ்நாட்டில் மேற்கூரை அமைப்புடன்கூடிய நவீன நெல் சேமிப்புத் தளங்கள் கட்டப்படுகின்றன.

4.03 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிக்கும் வகையில், 333 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சேமிப்புத் தளங்கள் கட்ட முதலமைச்சர் அவர்களால் ஆணையிடப்பட்டு, 2.83 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் சேமிப்புத் தளங்கள் திறக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளன.

மீதியுள்ள சேமிப்புத் தளங்கள் கட்டப்பட்டு வருகின்றன. இதனால் கொள்முதல் செய்த நெல்லைத் திறந்த வெளியில் சேமிப்பதைக் குறைத்தும், நெல் கொள்முதல் நிலையங்களிலிருந்து உடனுக்குடன் நெல்லை அனுப்பி வைத்ததன் காரணமாக, தரமான அரிசி கொடுக்க நேர்ந்ததோடு, அரசுக்கும் கணிசமான தொகையை மீதப்படுத்தியுள்ளோம் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொடர்ச்சி 6 ஆம் பக்கம்